# அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் - செப்டம்பர் 2017
## தமிழ் இரண்டாம் தாள்
**(இலக்கணம், துணைப்பாடம், கடிதம், கட்டுரை, மொழிப்பயிற்சி)**

**நேரம் : 2.30 மணி** **மொத்த மதிப்பெண்கள் : 100**

| | | |
|---|---|---|
| **அறிவுரை** : | 1. | அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக்கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும். |
| | 2. | நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும். |
| **குறிப்பு** : | 1. | இவ்வினாத்தாள் நான்கு பிரிவுகளைக் கொண்டது. |
| | 2. | விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் அமைதல் வேண்டும். |
| | 3. | வினா எண் **38** - க்கு உரிய படிவங்கள் விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளன. அதனைப் பூர்த்தி செய்யவும். |

**பிரிவு – I (மதிப்பெண்கள்: 20)**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**பகுதி-1**

**உரியவிடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **5 x 1 = 5**

1. வைகை என்பது ……க்கு எடுத்துக்காட்டு
   அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி
2. கருமை + குழி என்பது …… எனும் விதிகளின்படி புணரும்
   அ) ஆதிநீடல், இனமிகல் ஆ) தன்னொற்றிரட்டல், இடையுகரம் இ ஆதல் இ) ஈறுபோதல், இனமிகல்
3. பாலை நிலத்திற்குரிய பறவைகள்……….
   அ) கிளி, மயில் ஆ) நாரை,அன்னம் இ) புறா, பருந்து
4. புறத்திணைகள் …… வகைப்படும்
   அ) ஐந்து ஆ) ஏழு இ) பன்னிரண்டு
5. ஆசிரியப்பாவின் ஈற்றுச்சீர் …… முடிவது சிறப்பு
   அ) ஆகாரத்தில் ஆ) ஏகாரத்தில் இ) ஓகாரத்தில்

**பகுதி-2**

**கோடிட்ட இடத்தை நிரப்புக.** **5 x 1 = 5**

6. தலைவன் - இச்சொல்லில் ஐகாரம் ………மாத்திரை அளவினதாய்க் குறைந்து ஒலிக்கும்.
7. இளவழகன் வந்தான். இது ……. தொடர்.
8. அங்கே கிடப்பது பாம்போ? கயிறோ? என்பது……
9. ‘கிளி போலப் பேசினாள்’ - இச்சொல்லில் அமைந்துள்ள உவம உருபு ………
10. செய்யுளில் ஒரே பொருள் தரும் பல சொற்கள் வருவது …………………. அணி

**பகுதி-3**

**சுருக்கமாக விடையளி.** **10 x 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றினைச் சான்று தந்து விளக்குக.
12. உவமையை உருவகமாக மாற்றுக. – **மலர்பாதம்**
13. **இளமையில் கல்** - இது எவ்வகைத் தொடர்?
14. இரு பொருள் தருக.- நகை
15. மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக. – **தண்ணீர் பருகினான்**
16. பிறமொழிச் சொற்களை நீக்கி, உரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.
    **பெரியவர்களின் ஆசீர்வாதம் அவசியம்.**
17. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.

**இயங்குருப் படங்களைக் குழந்தைகள் விரும்பிப் பார்க்கின்றது.**

18. அடைப்புக்குள் கொடுக்கப்பட்டுள்ள வினைப்பகுதியை எச்சமாக்குக.
    தமிழர் நிலத்தினை ஐ வகையாகப் .... (பிரி) வாழ்ந்திருக்கிறார்கள்.
19. சந்திப் பிழை நீக்கி எழுதுக.
    **மனித இனத்தின் மரபு செல்வமாக தமிழ்மொழி விளங்குகிறது.**
20. கீழ்க்காணும் உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைக்க. **மடை திறந்த வெள்ளம் போல**

## பிரிவு – II (மதிப்பெண்கள்:10)

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5 x 2 = 10**

21. ஆய்தக் குறுக்கத்தை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
22. வினைமுற்றைக் கொண்டு எவ்வெவற்றை அறியலாம்?
23. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
24. சுட்டு விடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
25. மையீற்றுப் பண்புப் பெயர்கள் நான்கனை எழுதுக.
26. குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.
27. வெட்சி, கரந்தை திணைகளை விளக்குக.

## பிரிவு – III (மதிப்பெண்கள் : 50)

### பகுதி-1

| குறிப்பு : பகுதி 3-ல் வினாஎண் 35-ல் காதுகேளாத மாணவர்களுக்கு மட்டும் மாற்றுவினா வழங்கப்பட்டுள்ளது. |
|---|

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடையளிக்க. 2x 5 = 10**

28. குறள் வெண்பாவின் இலக்கணம் யாது?
29. நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்
    நீங்கின் அதனைப் பிற
    - இதில் பயின்று வந்துள்ள அணியை விளக்குக.**(அல்லது)**
    வஞ்சப்புகழ்ச்சி அணியைச் சான்றுடன் விளக்குக.
30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.
    தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
    செற்றார் செயக்கிடந்த தில்.

### பகுதி-2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் இரண்டிற்கு ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க. 2x 5 = 10**

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை விவரிக்க.
32. ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை 'குறட்டை ஒலி' கதையின் வாயிலாக விளக்குக.
33. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்களுள் ஒன்று குறித்து எழுதுக.

### பகுதி-3

34. **கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3+2=5**
    (அ) ஸ்டுடண்ட்ஸ் நீங்க தரோவா லெசன்ஸ் படிச்சாத்தான் எக்ஸாம்ல மார்க் ஸ்கோர் பண்ண முடியும்.
    (ஆ) அரபு எண்களுக்குரிய தமிழெண்களை எழுதுக. 78, 83, 216, 495

35. **கீழ்க்காணும் ஆங்கில உரைப் பகுதியைத் தமிழாக்கம் செய்க. 3 + 2 = 5**
    **அ)** Trees are very useful to us . They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

**ஆ) கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் எவையேனும் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1. Work is worship
2. Art is long but life is short
3. Live and let live
4. Manners make the man

**35. குறிப்பு : காது கேளாத மாணவர்களுக்கான மாற்று வினா. 5x 1 = 5**

மகாத்மா காந்தியின் நினைவாக, காந்தி என்னும் பெயரில் திரைப்படம் எடுக்கப்பட்டபோது நடந்த நிகழ்ச்சி. காந்தியாக நடிக்க பென் கிங்ஸ்லி என்னும் நடிகர் தேர்வு செய்யப்பட்டார். அவர் தங்குவதற்காக புதுதில்லியில் ஆடம்பரமான நட்சத்திர விடுதி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பென்கிங்ஸ்லி அவ்விடுதிக்கு வந்தார். அவருக்கு தேவையான அனைத்து வசதிகளும் மிகச் சிறப்பாக அமைக்கப்பட்டிருப்பதனைக் கண்டார்.

அவர் மிகவும் மகிழ்ச்சியடைவார் என மற்றவர் எதிர்பார்த்திருக்க பென்கிங்ஸ்லியோ அந்த அறையில் இருக்கும் அனைத்துப் பொருள்களையும் அகற்றச் சொல்லித் தமக்கு ஒரு பாயும், தலையணையும் மட்டும் போதும் என்றார். அதனைக்கேட்டு அங்கிருந்தவர்கள் வியப்படைந்தார்கள். இந்த வசதி போதவில்லையா? என்று கேட்டனர்.

அதற்கு அவர், "காந்தி மிகவும் எளிமையாக வாழ்ந்தார். நான் அவருடைய பாத்திரம் ஏற்று நடிக்கிறேன். இந்தப்படம் எடுக்கும் வரையிலாவது, நானும் அவரைப்போன்று எளிமையாக இருக்க விரும்புகின்றேன். அதனை, நான் மிகவும் பெருமையாகக் கருதுகின்றேன் என்றார்.

காந்தியடிகளின் எளிய வாழ்க்கை, மற்றவர்களுடைய வாழ்வில் எத்தகைய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது என்பதனை இந்நிகழ்ச்சி உணர்த்துகிறது.

எளிமை, என்றும் துணை வரும்; பகட்டு , ஆணவத்தைத் தூண்டும்; பொறாமை கொள்ளச் செய்யும்; ஏளனத்திற்கு ஆளாக்கும்; என்றும் துன்பம் தரும்; துணை நிற்காது.

**i) காந்தியாக நடிக்கத் தேர்வு செய்யப்பட்ட நடிகரின் பெயர் என்ன?**
**ii) அவருக்கு எங்கு தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது?**
**iii) அதனைக் கண்ட நடிகர் என்ன கூறினார்?**
**iv) எளிமையாக இருக்க விரும்பிய நடிகர் என்ன காரணம் கூறினார்?**
**v) எளிமையின் சிறப்பு யாது?**

## பகுதி-4

**36. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x 5 = 5**

**(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

ஒரு நாள் இரவு கண்ணன் தூக்கம். வராமல் படுக்கையில் திரும்பித் திரும்பிப் படுத்துக் கொண்டிருந்தான். அப்போது அவனது அம்மா ஆழ்ந்த உறக்கத்தில் ஏதோ மெல்லிய குரலில் பேசுவது கேட்டது. அதனை உற்று கவனித்த கண்ணன்….

**(அல்லது)**

**(ஆ) கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

'பள்ளி' அல்லது 'குழந்தை'

## பகுதி-5

**37. கீழ்க்காணும் பாடலைப் படித்துணர்ந்து அதன் மையக் கருத்தினை எழுதுக, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களை எடுத்தெழுதுக. 1x 5 = 5**

எளியநடை யில்தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளிவுறுத்தும் படங்களொடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லாரும் நாணிடவும் வேண்டும்

- பாரதிதாசன்

**பகுதி-6**

38. கலா என்பவர் தனது சேமிப்புக் கணக்கில் ரூ.6000 செலுத்துவதற்காக வங்கிக்குச் சென்றுள்ளார். தேர்வர் தன்னைக் கலாவாக நினைத்து, விடைத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ள படிவங்களில் உரிய படிவத்தினைத் தேர்ந்தெடுத்து நிரப்புக. **1x 5 = 5**

**பகுதி-7**

**39. (அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து அது குறித்த வினாக்களுக்கு விடையளிக்க. 3+2=5**

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகின்றன. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்து விட்டன. ஆனால் அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.

“நான் சொன்னால் சொன்னதுதான். நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியது தான்'' என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்று விட்டார்.

''அப்பா உனக்கு நல்லது தான் செய்வார் ; அப்பாவின் பேச்சைக் கேள்'' என்று அம்மா கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள், தேவி.

i) தேவி ஏன் அழுது கொண்டிருந்தாள்?

ii) இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள்?

iii) உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப் படித்து விடையளிக்க.**

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகிறான். மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகிறான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும் போது தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும், தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில், அவன் மிகச்சிறந்த பொறியாளராக வரவேண்டும் என்பது அவருடைய விருப்பம்.

மதியழகன் தந்தையிடம் எப்படிச் சொல்லிப் புரிய வைப்பது என்று தெரியாமல் தடுமாறுகிறான்.

i) மதியழகன் தன் பெற்றோரை எவ்வாறு சம்மதிக்க வைப்பான்?

ii) இந்தச் சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?

**பிரிவு – IV (மதிப்பெண் : 20)**

**பகுதி-1**

**40. கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றினுக்கு விடையளிக்க. 1x 10 = 10**

(அ) நீவிர் வசிக்கும் பகுதிக்கு மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரிய தலைமைப் பொறியாளருக்கு ஒரு விண்ணப்பம் வரைக. **(அல்லது)**

(ஆ) சுற்றுலாச் செல்ல அனுமதி வேண்டி தந்தைக்குக் கடிதம் எழுதுக.

**பகுதி-2**

**41. கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றினுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. 1x 10 = 10**

(அ) நூலகத்தின் தேவை – பள்ளி நூலகம் – பொது நூலகம் – படிப்பதனால் ஏற்படும் பயன்கள் – வாசிக்கும் பழக்கத்தை வளர்க்க வேண்டியதன் அவசியம். **(அல்லது)**

(ஆ) கணினியின் தோற்றம், வளர்ச்சி – வகைகள் – பல்துறைப் பயன்பாடு தேவை – உலகம் உள்ளங்கையில்.